©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 166] CHENNAI, MONDAY, JUNE 6, 2011
Vaikasi 23, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

---

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

---

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், விருதுநகர்**

**விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், கணபதி சுந்தர நாச்சியார்புரம் ஊராட்சி மன்றத்தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. உ.இ1/2711/2009.)*

**No. VI(2)/330(b-1)/2011.**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994ஆம் ஆண்டு 21—வது சட்டம்), பிரிவு 205, உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், கணபதி சுந்தர நாச்சியார்புரம் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி எம். சுந்தரம்மாள் என்பவர் கணபதி சுந்தர நாச்சியார்புரம் ஊராட்சியில் 2009—10ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் இலவச தொகுப்பு வீடுகள் கட்டியபோது இறந்த நபர்களின் பெயர்களை பயனாளிகளாக தேர்வு செய்ய அன்னாரது வாரிசுகளை பயனாளிகளாக தவறாக அடையாளம் காட்டியதால், அவரை கணபதி சுந்தர நாச்சியார்புரம் ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வறிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் தேதி முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. உ.இ1/308/2010.)*

**No. VI(2)/330(b-2)/2011.**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994ஆம் ஆண்டு 21—வது சட்டம்), பிரிவு 205, உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி சி. பஞ்சவர்ணம் என்பவர் தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சியில் முறையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமலும், பதிவேடுகள், முறையான செலவினச் சீட்டுகள் பராமரிக்கப்படாமலும், ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய காரணத்தினால் அவரை தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வறிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் தேதி முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெம்பக்கோட்டை ஊராட்சி மன்றத்தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. உ.இ1/3120/2010.)*

**No. VI(2)/330(b-3)/2011.**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994 ஆம் ஆண்டு 21–வது சட்டம்), பிரிவு 205, உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெம்பக்கோட்டை ஊராட்சி மன்றத்தலைவர் திரு. கே. கோவிந்தன் என்பவர் வெம்பக்கோட்டை ஊராட்சியில் முறையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமலும், பதிவேடுகள், முறையான செலவினச் சீட்டுகள் பராமரிக்கப்படாமலும், ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய காரணத்தினால் அவரை வெம்பக்கோட்டை ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வறிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் தேதி முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. உ.இ1/3256/2010.)*

**No. VI(2)/330(b-4)/2011.**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994 ஆம் ஆண்டு 21–வது சட்டம்), பிரிவு 205, உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. வெ. கணேசமூர்த்தி என்பவர் ஆலங்குளம் ஊராட்சியில் முறையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமலும், பதிவேடுகள், முறையான செலவினச் சீட்டுகள் பராமரிக்கப்படாமலும், ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய காரணத்தினால் அவரை ஆலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வறிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் தேதி முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இராமுத்தேவன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. உ.இ1/3257/2010.)*

**No. VI(2)/330(b-5)/2011.**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994 ஆம் ஆண்டு 21–வது சட்டம்), பிரிவு 205, உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இராமுத்தேவன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி மு. சீதாலட்சுமி என்பவர் இராமுத்தேவன்பட்டி ஊராட்சி நிதியில் முறைகேடுகள் மற்றும் விதிமுறை மீறல்கள் செய்துள்ளது நிரூபிக்கப்பட்டதால், அவரை இராமுத்தேவன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வறிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் தேதி முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விருதுநகர்,
2011 மே 30.

**வே.க. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.